**வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**

இணைந்து வழங்குபவர்கள்

பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை

ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்

ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | **சிவகங்கை** | காலம் : | **20/07/2024** | முதல் | **24/07/2024** |
| அறிக்கை எண் : | **058/ 2024** | வெளியீட்டு நாள் : | **19/07/2024** | | |

**சிவகங்கை மாவட்டத்தின் கடந்த வார வானிலை**

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35°-36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°-28° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (14.07.2024முதல் 18.07.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு –24-07-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14/07 | 15/07 | 16/07 | 17/07 | 18/07 | தேதி | நாள்-1 20/07 | நாள்-2 21/07 | நாள்-3 22/07 | நாள்-4 23/07 | நாள்-5 24/07 |
| 0.0 | 0.0 | 0.3 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 36 | 37 | 36 | 35 | 35 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 35 | 35 | 35 | 35 | 35 |
| 26 | 26 | 25 | 27 | 28 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 28 | 28 | 28 | 28 | 28 |
| 6 | 7 | 7 | 7 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 6 | 6 | 6 |
| 70 | 84 | 63 | 75 | 60 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 65 | 65 | 58 | 58 | 58 |
| 53 | 83 | 55 | 55 | 56 | | 54 | 54 | 55 | 55 | 55 |
| 16 | 6 | 12 | 10 | 14 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 25 | 22 | 20 | 15 | 12 |
| மேற்கு | வட மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

**குறுஞ்செய்தி :**

அடுத்த 5 நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலையானது 35° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 28° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 12 முதல் 25 கி.மீ வேகத்தில், மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

**பொது ஆலோசனை:**

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு**(19ஜூலை-01 ஆகஸ்ட் 2024):

**மழைப்பொழிவு :**

19-07-2024 - 25-07-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை :**

19-07-2024 - 25-07-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று குறைந்து காணப்படும். 26° செல்சியஸ் முதல் 30° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

26-07-2024 - 01-8-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 26° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

19-07-2024 - 25-07-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 18° செல்சியஸ் முதல் 22° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

26-07-2024 - 01-08-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 22° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**விவசாயம் :**

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 12 முதல் 25 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

விவசாயிகள் தோட்டக்கலை பயிர்களான மிளகாய், கத்தரி, புடலங்காய், வாழை மற்றும் பல வருட பயிர்களை தேர்வு செய்து ஆடிப்பட்டம் விதைப்பு மற்றும் நடவு வேலைகளுக்கு தயார் ஆகும்படி கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : மிளகாய், வாழை, கால்நடை**

**மிளகாய்:**

மிளகாய்ப் பயிரில் இலைப் பேன் தாக்குதல் தென்படுகின்றது. இதன் தாக்குதலால் இலைகளில் சுருக்கங்கள் ஏற்படும், இலைகள் மேல் நோக்கி சுருண்டு விடும், இலைக் காம்பு நீண்டு விடும்.

செடிகளின் வளர்ச்சி குறைவதோடு, பூ மற்றும் காய்கள் உற்பத்தி தடைபடும், மொக்குகள் எளிதில் உதிர்ந்து விடும்.

இதன் தாக்குதலை குறைக்க அகத்தியை ஊடு பயிராக பயிரிடலாம்.

மிளகாய் நாற்றுகளின் மேற்பரப்பில் நீரைத் தெளித்து பேன்களின் பெருக்கத்தை கட்டுப்படுத்தலாம்.

மேலும் இதனைக் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 3 மிலி. என்ற அளவில் இமிடாக்குலோபிரிட் என்ற பூச்சிக்கொல்லி மருந்தினை கலந்து தெளிக்கவும்.

**வாழை:**

வாழை பயிரில் தேமல் வைரஸ் நோய் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. நோய் தாக்குதலின் அறிகுறியானது பசுமையான இலைகளில் வெளிரிய கோடுகளுடனும், இலைகள் சிதைந்தும் காணப்படும். மேலும் பழங்களிலும் வெளிரிய கோடுகளும், சிதைவும் காணப்படும்.

இதனைக் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 40 மில்லி வேப்ப எண்ணெய் மற்றும் 40 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி உடன் 10 மில்லி ஒட்டுப்பசை கலந்து தெளிக்க வேண்டும்

**கால்நடை:**

நிலவும் பருவச் சூழ்நிலையால் தங்களது வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளை வெளிப்புற ஒட்டுண்ணிகள் தாக்க வாய்ப்புள்ளது.

இத்தகைய வெளிப்புற ஒட்டுண்ணிகளை நீக்க, 2 மில்லி பூட்டாக்ஸ் மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தங்களது வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளின் வெளிப்புறங்களில் பூச வேண்டும்.

இந்த மருந்து வெளிப்புற பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். கண்டிப்பாக உள்ளே கொடுக்க கூடாது.